செ.வெ.எண்: 31 / செப்டம்பர் /2019 நாள்: 10.09.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், சிறுகமணி பேரூராட்சி, முசிறி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.**

------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், சிறுகமணி பேரூராட்சி, முசிறி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.09.2019) ஆய்வு செய்தார்.

சிறுகமணி பேரூராட்சி அலுவலகம், முசிறி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், முசிறி வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், திருவாசி ஊராட்சி, துடையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு ஆய்வு செய்து பள்ளி மாணவ, மாணவிகளிடம் கணித பாடம் தொடர்பாக கல்வித்திறனை சோதித்தறிந்து, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எளிய முறையில் பாடங்களைக் கற்பித்தால் தான் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள். ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு மாணவர்களுக்கு கல்வியை கற்றுக்கொடுக்க வேண்டும் என ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், துடையூர் அங்கன்வாடி மையத்தில் மாணவர்களுக்கு வழங்குவதற்காக சமைக்கப்பட்ட மதிய உணவை ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது முசிறி கோட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன், வட்டாட்சியர் திரு.எஸ்.பி.ஆறுமுகம், சிறுகமணி பேரூராட்சி செயல் அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

10/9/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**